*Available online at:* ***http://www.advancedscientificjournal.com***
***http://www.krishmapublication.com***
***IJMASRI, Vol. 2, issue 1, pp. 340- 343, Oct. -2023***
**https://doi.org/10.53633/ijmasri**

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# பழந்தமிழ் இலக்கியம் நிறுவும் தமிழர் பண்பாட்டு வளர்ச்சியின் காலங்கள்

**தேனருவி மாரிமுத்து**

*முதுநிலை வரலாறு – இறுதி ஆண்டு, சென்னை.*
*Email: drthenomfs@yahoo.com*

**ஆய்வு சுருக்கம்**

*மனித வாழ்வு நிறைவுடன் இருக்க வேண்டும் என்றால் மனிதன் எழுத்தறிவு பெற்றிருக்க வேண்டும் கணக்கயும் அறிந்திருக்க வேண்டும் என எண்ணெழுத்து இரண்டையும் கண்ணெனெப் போற்றியது தமிழ்ச்சமூகம். ஒருவன் கற்ற கல்வி மற்றவனுக்கும் பயன்பட வேண்டும் என்று பண்டைய தமிழ்ச்சமூகம் கருதியது அப்படி ஒருவன் கற்ற கல்வி பிறருக்கு பயன்படாவிட்டால் மணம் பரப்பாத மலர் போல தான் அவன் கருதப்படுவான் என்று தமிழ் இலக்கியம். அறிவும் ஊக்கமும் அவர்கள் வாழ்வில் இடம் பெற்றிருந்தன. இது போன்ற இன்னும் பல பண்பாட்டு கூறுகள் பழந்தமிழ்ர் வாழ்வில் இடம் பெற்றிருந்ததனைப் பண்டைய தமிழிலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.*

*ஒரு சமுதாயம் அமைத்து அதனை வழி நடத்தி இயற்கையுடன் இயைந்து வாழ்ந்து வருதலுக்கே பல நூற்றாண்டு காலம் ஆகும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறிருக்கயில் வாழ்வின் அனைத்துச் சுவைகளயும், நாவின் பல்சுவை, செவிக்கு இசை,கண்களுக்கு குளிரோவியங்களும் காப்பியங்களுமென அனைத்திலும் உச்சம் பெற்ற சிறந்ததொரு நாகரிகமாகத் தமிழர் வாழ்ந்ததற்கு இவை சான்றுகளாம். பிற தேச மக்கள் ஏதேனும் ஒன்றில் சிறந்தவராக விளங்கிய காலமதில் அனைத்திலும் சிறந்து இவர் விளங்கினர் என்பதனை நினைத்துப்பார்க்க வேண்டும். உண்டுகளித்தலே சிறந்ததென எண்ணாமல் சங்க காலத்தே பெண்பாற் புலவர்களைக் கொண்ட கல்வியிற் சிறந்த நாகரிகம் தமிழர் நாகரிகம்.*

## தமிழர்

*வட இமயத்தில் இருந்து குமரி வரை உள்ள பகுதியும் அதற்குத் தெற்கே கடலுள் மூழ்கிய இலெமூரியாக் கண்டம் உள்ளடங்கிய நிலப்பரப்பும் சேர்ந்ததே தமிழ் வழங்கிய தமிழர் நாடாகும். இலெமூரியாக் கண்டம் கடற்கோளால் அழிந்தது. இப்பகுதி போக எஞ்சிய பரப்பு "இந்தியா" என்ற பெயரில் உள்ளது.இதை புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'நாவலன் தீவு 'என அழைக்கின்றார்.*

*" இன்றுகாணும் தென்பெருங்கடல்*
*முன்னாள் முற்றமிழ்க் கழகம் இருந்த*
*குமரிநாடு! இன்னும் கூறுவேன்:*
*இந்நாள் ஆரியர் இருக்கும் நாடு*
*முன்னாள் தமிழ்கமழ் முல்லைக்காடு!*
*தெலுங்கம், கன்னடம், கேரளம், வங்கம்*
*எனும் பெயர் உடையவை எல்லாம் தமிழகமே!*
*கொடுங்கடல் கொண்ட குமரி தொடங்கி*
*பனிவரை வரைக்கும் பரந்த தமிழகம்*
*உமதெனில் நாட்டில் உமக்குள உரிமையும்*
*உமக்குள பொறுப்பும் ஒருவருக்கும் இல்லை"*
*எனப்பாடினார் புரட்சிக்கவிஞர் "குயில்"*
*17.6.1958*

## தமிழர் வாழ்வும் செயற்பாடுகளும்

கடலுள் மூழ்கிய இலெமூரியாக் கண்டம் நீங்கிய பகுதியில் வாழ்ந்த மக்கள் அவர் பேசிய மொழியால் தமிழர் என்றும் உலக மக்களை இனவாரியாகப் பிரிக்கும் போது திராவிடர் என்றும் வரலாறு அழைத்தது.

பழந்தமிழர் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல்

**இல்லறம்**

ஒரு தலைவனும் ஒரு தலைவியும் இணைந்து சமுதாயத்தின் அடித்தளமாகிய குடும்பத்தை தமிழர்கள் நடத்திவந்தனர். இந்தநிலைக்கு
அவர்கள் இல்லறம் என்று பெயரிட்டனர்.இல்லறத்தில் இவ்வாறு ஈடுபட்ட பழந்தமிழ் மக்கள் பழிக்கஞ்சி வாழ்ந்தனர். ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புனர்’. ஒருமை மகளிராகப் பெண்கள் காட்சி அளித்தனர். ஆடவரின் ஒழுக்கக்கேடு கண்டிக்கப்பட்டது.

**சமையற் கலை**

தமிழ்ப் பெண்கள் சுவைபடச் சமைப்பதில் வல்லவர்களாக இருந்தனர்.

‘முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.’

என்ற தமிழ் இலக்கியப் பாடலே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.ஒரு பண்டம் சிறக்க அதில் சேர்க்கப்படும் பொருட்களின் தனிச்சுவயும் தரமும் மிக மிக்கிய பங்காற்றும். மோர்க்குழம்பு சமைக்க வேண்டிய சிறந்த பதத்தில் தயிரை குழைத்து சமைக்கத் தெரிந்த தலைவியர் கொண்ட வீடுகள் தமிழ்நாட்டில் இரண்டாம் நூற்றாண்டு காலத்தே இருந்தமைக்கு இது சான்று [குறுந்தொகை - பாடல் 167 - இரண்டாம் நூற்றாண்டு].இதில் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், ஒரு உணவினை சமைக்க வேண்டிய மூலப்பொருட்களையும் கூட பதம் பார்த்து தாமே தயார் செய்யக்கூடியவராக அவர் இருந்தனர் என்பது.

**கட்டடக் கலையும் வீதி அமைப்பும்**

மொஹஞ்சாதாரோ, ஹரப்பா என்று அழைக்கப்படும் சிந்து வெளிப் பகுதிகள் தமிழர்கள் பண்பட்ட வாழ்வு வாழ்ந்த பகுதியேயாகும். இங்கு அவர்கள் கட்டிடம் கட்டிய திறமையையும் வீதிகள் அமைத்த பாங்கையும் வரலாற்று ஆசிரியர்கள் பாராட்டுகின்றனர். குளிப்பதற்க்கென்று அவர்கள் அமைத்த இடம் இன்றும் அப்பகுதி வரலாற்றைக் கற்பவருக்கு வியப்பை அளிக்கின்றது.வாரங்கல் எனப் பெயரிய ஆந்திர மாநில ஊரில் பாறையைக் குளமாக்கிக் குளிக்குமிடமாக இன்றும் விளங்கச் செய்துள்ளமை பண்டைய மரபின் தொடர்ச்சியேயாகும். மொஹஞ்சதாரோவில் காணப்பட்ட காளைகளின் உருவங்கள் தமிழர் நாகரிகத்தின் காளைகள் வகித்த இடத்தை காட்டுகின்றன. இந்தக் காளை உருவத்தைக் கணினி உதவியுடன் குதிரையாகக் காட்டி குதிரைகள் ஆரியத்தின் உடைமைகள் எனவே பாஞ்சகரோ ஹரப்பா நாகரிகம் ஆரிய நாகரிகம என்று எழுந்த நச்சுக் கருத்து வரலாற்று ஆசிரியர்கள் முன் எடுபடவில்லை.

இன்றைய மதுரையில் சதுரங்களாக ஒன்றின் பின் ஒன்றாக வீதிகள் அமைந்துள்ளமை காண்கிறோம். இதுவும் மொஹஞ்தாரோ ஹரப்பாவில் உள்ள வீதிகளின் அமைப்புடன் ஒன்றியுள்ளது. சிந்துவெளி நாகரிகம் தமிழன் நாகரீகம் என நிறுவப்பட்டுள்ளமை தமிழரின் பண்பட்ட வாழ்வியலுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

கீழடியில் அன்மையில் கிடைத்த சுடுமண் பொம்மைகளும், பானை ஓடுகளில் கிடைத்த எழுத்துருவங்களும் நகைகளும் சிந்து சமவெளி நாகரிகத்தில் கிடைத்த பொருட்களைப்போன்றே இருப்பது கீழடியிலிருந்து சிந்து சமவெளிவரை உள்ள நாகரிகம் ஒரே நாகரிகம், அது அனைத்தும் தமிழர் குடி அமைத்து, ஆண்டு, தமிழ் வளர்த்ததன் எச்சம் என்பது இச்சான்றுகளால் தெளிவுற நிருவப்பட்டுள்ளது.

**வணிகம்**

தமிழர் கடல்கடந்து சென்று வணிகம் செய்த செய்தியையும் இலக்கியங்கள் தருகின்றன. இது தமிழரின் பொருளியல் துறையை காணக் கிடைக்கும் சிறப்பு செய்தியாகும் பொருள் தேடத் தலைவியைப் பிரிகின்ற தலைவன், “பட்டினம் பெறினும் வாரேன் வாழிய நஞ்சே” என பட்டினப்பாளை என்னும் மிகப்பெரிய தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடுவது காண்கிறோம். [முதல் நூற்றாண்டு காலம் - சஙக இலக்கியம்]

காவிரிப்பூம்பட்டினத்தை தந்தாலும் தலைவியை பெரிய ஒருப்படாதவனாகத் தலைவன் இருந்ததாக நாடக இயலில் இப்பாடல் வரி அமைந்துள்ளது.பிரிவு இன்றியமயாதது; பிரிந்து சென்றால் தான் பொருள் தேட இயலும். அப்போது தலைவி ஆற்றி இருத்தல் வேண்டும் என்ற செவ்விய வாழ்வியற் கருத்தை இங்குக் காண்கிறோம்.

**நானிலப் பகுப்பு**

வாழ்கின்ற இடத்தில் உள்ள சுற்றுச்சூழலையும் எழுத்து இயல்புகளையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்தம் தொழில் ஈடுபாட்டையும் ஒழுக்க நெறிகளையும் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் என நானிலப் பகுப்பு எடுத்துக்காட்டுகின்றது. முல்லையும் குறிஞ்சியையும்

முறைமையில் திரிந்து பாலை நிலங்கள் ஆங்காங்கே உருவாகின என்ற செய்தியும் நமக்கு கிடைக்கின்றது. இந்த பகுப்பு முதல், கரு, உரி என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதல் பொருள் நிலத்தையும், கருப்பொருள் அந்த நிலத்திலுள்ள மக்கள், பொருள்களையும் உரிப்பொருள் அம்மக்களின் ஒழுக்க நெறியினையும் எடுத்துக்காட்டுகின்றது.

### வாழ்வியல் நெறிகள்

"வினையே ஆடவர்க்குயிரே" என்ற பழந்தமிழ் இலக்கிய வரி ஒவ்வொரு மனிதனும் உழைத்து ஆதல் வேண்டும் என்பதைச் சுட்டுகின்றது. "ஈதல் இசைபட வாழ்தல்", "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற சொற்றொடர்கள் மனிதன் தனக்காக மட்டும் வாழக்கூடாது பிறருக்காகவும் வாழ வேண்டும் என்று தமிழர் நெறியை எடுத்துக்காட்டுகின்றது.

### யாதும் ஊரே யாவரும் கேளிர்

சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது சென்னை கடற்கரையில் அன்னாளைய குடியரசுத் தலைவர் அவர்கள் தலைமையில் இதையொட்டி நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் உரையாற்றிய தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் அண்ணா என்று அன்போடு அனைவராலும் அழைக்கப்படும் அண்ணாதுரை அவர்கள் மாநாட்டு விருதுருவாக்கிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநாநூற்றுப் பாடலின் சொற்றொடர் தமிழ் பண்பாட்டின் தனிப்பெரும் ஆவணமாக அமைந்திருப்பதே எடுத்து விவரித்தார். இவ்வாறு விவரித்து விட்டு அதற்கு அடுத்தபடியாக தீதும் நன்றும் பிறர் தர வாரா என்ற தொடர்க்கும் சொற்றொடர்க்கும் அழகிய விளக்கம் தஎந்தார். நாமாக ஏற்றுக் கொண்டாலன்றிப் பிறரால் ஒரு தீமை நம்மீது திணிக்கப்பட முடியாது என்று விளக்கம் அளித்தார்.

### உழவனைப் பாராட்டிய முடிமன்னன்

முடிமன்னன் ஆண்ட காலம் பழந்தமிழ்க் காலம். சோழநாட்டில் ஓரூர். அவ்வூரில் ஓர் உழவன் இல்லம். அந்த இல்லத்திற்க்கு இள மக்கள் வரிசையாக வந்து சோற்று உருண்டைகளை வாங்கி செல்கின்றார்கள்.ஆம் இவ்வாறு சோற்றை வாரி வழங்கியவன் சிறுகுடி எனும் ஊரில் வாழ்ந்த பண்ணன் என்ற ஓர் உழவன். இவன் வீட்டிலிருந்து சிறுவர்கள் சோற்று உருண்டைகளை பெற்றுக்கொண்டு எறும்பு வரிசையாகச் செல்வது போல் நடந்து செல்லும் காட்சியை ஒரு மேட்டில் குதிரையிலிருந்த ஒரு முடிவண்ணன் காண்கிறான்.

தன் நாட்டில் இப்படிப் பசிப்பிணி தீர்க்கும் உழவன் உள்ளானே என எண்ணி மகிழ்ந்தான் குதிரையில் உட்கார்ந்திருந்த மன்னன்.இம்மன்னன சோழப் பெருநாட்டின் கரிகாலன், பண்ணன் என்ற பெயருடைய அந்த உழவனைப் பாராட்டினான் என்பதிலும் எப்படிப்பாராட்டிணான் என்பது படிப்பவர் உள்ளத்தினை மகிழ்விக்கின்றது. "யான் வாழுநாளும் வாழிய பண்ணன்" என்று பாராட்டினான் அந்தச் சோழ மன்னன். நீடூழி வாழ்க என்றும் நெடுநாள் வாழ்க என்றோ பாடியிருந்தால் அது சாதாரண பாராட்டு. இப்போது இருக்கின்ற என் எஞ்சிய வாழ்நாளையும் - ஆயுளையும் சேர்த்து பண்ணன் வாழட்டும் என்றான் நாட்டின் காவலன். நல்லது செய்யும் நாட்டின் குடிமகனைப் பாராட்டும் தமிழ் மன்னனைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெற்றிருந்த ஒப்பற்ற திருநாடு தமிழ்நாடு. தொண்டறத்தை - ஒரு சாதாரண குடிமகனின் தொண்டறத்தை மனங்குளிர வாய் குளிர மண்டலத்தை ஆண்ட மன்னனே பாராட்டிய நாடு இந்தத் தமிழ்நாடு [ புறனானூறு பாடல் 173 ].

### அரசியலமைப்பு

அரசியல் என்பது நெறி தவறியவர்களின் கடைசிப் புகலிடம் என்பது மேனாட்டார் கருத்து. ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சமுதாயம் அரசியலை வாழ்வின் ஒரு கூறாக அமைத்தது.மக்கள் நல்வாழ்விற்க்கு அரசியலைக் கருவியாகப் பயன்படுத்தியது. அரசியலுக்குத் தலைவனாக இருந்த மன்னன் 'குடிதழீஇக் கோலோச்சிய' பாங்கைத் தமிழர் வரலாறாக அமைத்துள்ள பழந்தமிழ் இலக்கியங்களின் வழி காண்கிறோம். மலர்தலை உலகம் மன்னனாற் சிறப்புற்றது.அரசன் எவ்வாறு இயங்கவேண்டும், அவனுடைய அமைச்சர்கள் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான விளக்கங்களைப் பண்பாட்டின் உயர்சின்னமான பதில்களை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் தம் திருக்குறளில் கூறிச் சென்றுள்ளார்.

ஒரு சாதாரண குடிமகன் கூட அரசவையை அடைந்து தனக்காக வழக்குரைத்து வாதாடிய வரலாறு நம்மை பெருமை கொள்ளச்செய்கின்றது. சொந்த வாழ்வில் பேரிழப்பை சந்தித்து விட்டு மன்னன் அவைக்கு வந்தான். இப்போது அரச தண்டனைக்குள்ளாகி தன் உயிரையே விட்ட கணவனை பிரிந்த அவ்வளவு உணர்ச்சியுடன் பாண்டிய மன்னன் அரசவைக்கும் கையில் ஒற்றைச்சிலம்புடன் கண்ணீரும் கம்பளையுமாக நுழைந்தாள் அப்பெண். தன் கணவன் குற்றம் அற்றவன் என எடுத்து கூறி வாதாடர் நெருப்பு கோலமாக அவள் அரசவைக்குள் நுழைகிறாள். அவளை நோக்கி நான் பாண்டிய மன்னன் 'நீர்வார் கண்ணை, என்முன்வந்தோய், யாரையோ நீ மடக் கொடியோய்? ' என்றான் கனிவுடன் தன்னிடம் வழக்குரைக்க வந்த கண்ணகியைப் பார்த்துத்தான் இவ்வாறு வினவினான் பாண்டியன் நெடுஞ்செழியன். என்ன பதில் வந்தது

கன்னகியிடமிருந்து பதிலா பதிலாக ஆவேசம் கிளம்பியது அவள் வாயில் இருந்து 'தேரா மன்னா செப்புவதுடையேன்" என்றாள் அவள் [சிலப்பதிகாரம் ஐந்தாம் நூற்றாண்டு].

ஒரு சாதாரண குடிமகல் முடி அணிந்த மன்னனை பார்த்து 'ஆராயாத மன்னனே!" என்று குற்றச்சாட்டுடன் அவனுடன் உரையாடுகின்றாள் இந்த வரியை உடைய சிலப்பதிகாரத்தை எழுதிய கவிஞன் இன்னொரு தமிழ் மன்னன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் இந்த சொற்றொடருடன் தன் வாழ்க்கையை எந்த வழக்குரைஞர் துணையும் இன்றி தானே வாதாடுகிறாள். ஐந்தாம் நூற்றாண்டில் தமிழ் ஆட்சியில் முடியாட்சியில் தனிமனித உரிமையும் வாழுக்கு எவ்வளவு இடம் அளிக்கப்பட்டது என்பதற்கு இந்நிகழ்ச்சி அறியச் சான்றாக அமைகின்றது தன் தவறான முடிவின் பெயரில் கண்ணகியின் கணவன் கோவலன் கொலையுண்டான் என்பதை அறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் தான் பிறந்தவர் செய்து விட்டோமே எண்ணி அதிர்ச்சியுடன் நீதி வழுவாட்டம் கொடியின் பெருமைக்கு தான் இழக்க தேடி விட்டோமே என்னை வருந்தினார் அதன் விளைவாக இன்றைய மொழியில் கூற வேண்டுமானால் அரசவேலையே மாரடைப்பால் மாண்டான் என்ற செய்தியை சிலம்பில் படிக்கும் போது தமிழர் அரசியல் முடிமன் களத்தில் எத்தகைய உயரிய வளர்ச்சி பெற்றிருந்தது பண்பட்டு இருந்தது என்பதை அறிகின்றோம்

**முடிவுரை**

மனித வாழ்வு நிறைவுடன் இருக்க வேண்டும் என்றால் மனிதன் எழுத்தறிவு பெற்றிருக்க வேண்டும் கணக்கயும் அறிந்திருக்க வேண்டும் என எண்ணெழுத்து இரண்டையும் கண்ணெனப் போற்றியது தமிழ்ச்சமூகம். ஒருவன் கற்ற கல்வி மற்றவனுக்கும் பயன்பட வேண்டும் என்று பண்டைய தமிழ்ச்சமூகம் கருதியது அப்படி ஒருவன் கற்ற கல்வி பிறருக்கு பயன்படாவிட்டால் மணம் பரப்பாத மலர் போல தான் அவன் கருதப்படுவான் என்று தமிழ் இலக்கியம். அறிவும் ஊக்கமும் அவர்கள் வாழ்வில் இடம் பெற்றிருந்தன. இது போன்ற இன்னும் பல பண்பாட்டு கூறுகள் பழந்தமிழ்ர் வாழ்வில் இடம் பெற்றிருந்ததனைப் பண்டைய தமிழிலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு சமுதாயம் அமைத்து அதனை வழி நடத்தி இயற்கையுடன் இயைந்து வாழ்ந்து வருதலுக்கே பல நூற்றாண்டு காலம் ஆகும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறிருக்கயில் வாழ்வின் அனைத்துச் சுவைகளயும், நாவின் பல்சுவை, செவிக்கு இசை,கண்களுக்கு குளிரோவியங்களும் காப்பியங்களுமென அனைத்திலும் உச்சம் பெற்ற சிறந்ததொரு நாகரிகமாகத் தமிழர் வாழ்ந்ததற்கு இவை சான்றுகளாம். பிற தேச மக்கள் ஏதேனும் ஒன்றில் சிறந்தவராக விளங்கிய காலமதில் அனைத்திலும் சிறந்து இவர் விளங்கினர் என்பதனை நினைத்துப்பார்க்க வேண்டும்.

உண்டுகளித்தலே சிறந்ததென எண்ணாமல் சங்க காலத்தே பெண்பாற் புலவர்களைக் கொண்ட கல்வியிற் சிறந்த நாகரிகம் தமிழர் நாகரிகம்

*****